**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-06032022-4685

Volume: 6

Issue: 3

Month: January

Year: 2022

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 09.11.2021

Accepted: 22.12.2021

Published: 01.01.2022

Citation:
Birunthavanam, M. "Mother Deity Devotion Arur Region." *Shanlax International Journal of Tamil Research*, vol. 6, no. 3, 2022, pp. 194–00.

DOI:
https://doi.org/10.34293/tamil.v6i3.4685

*Corresponding Author:
brindhavanam1987@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Mother Deity Devotion Arur Region

**M. Birunthavanam**
*Full-time PhD Research Scholar*
*Department of Tamil Masters and Research*
*Sacred Heart College (Self), Tirupati*
http://orcid.org/0000-0001-6330-0914

**Abstract -** Many folk deities are worshiped in Tamil Nadu. Worship is an important part of the life of the folk people. Worship of the mother goddess precedes any event in the life of the folk people. This research paper focuses on the worship of the goddess in the divine thoughts in the life of Tamil's. This article examines mother deities, mother deities in Tamil grammar, mother deities in ancient Tamil literature, descriptions of folk deities, characteristics and customs of folk deities, origin of deities, goddesses such as Devathiamman and Chenniyammal. This article is based on the beliefs of the goddess, especially from ancient times to the beliefs of the people of the Arur region.

**Keywords:** Mother Deity, Worship, Tamil Religion, Folklore, Thaitheiva Vazhipadu, Folk Deities, Mother Deities, Tamil Literature, Devathiamman and Chenniyammal

**References**

1. Rukmini, R. Chidambaranar Mavatta Sirutheivangal, P. 22.
2. Srinivasan, R. Sakthi Vazhipadu, P.19.
3. Kazhaga Veliyeedu, Puraporul Venpamalai, Vanji - 5.
4. Kazhaga Veliyeedu, Silappathikaragam, Vettuvar Vari.
5. Jeyapal, R., Agananooru Padal - 370.
6. Natchinrkiya Urai, Tolkappiyam, Porul Noorpa: 5, P.11.
7. Rajendran, A. Nattupura Panpattu Vazhakkangal, P.12.
8. Nannan Nadu, Monthly Magazine, 1983.

# அரூர் வட்டாரத் தாய்த்தெய்வ வழிபாடு

*மு. பிருந்தாவனம்*
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை
தூயநெஞ்சக் கல்லூரி (தன்னியல்), திருப்பத்தூர்

***ஆய்வுச் சுருக்கம்***

*தமிழ்நாட்டில் பல நாட்டுப்புறப் பெண்தெய்வங்கள் வழிபடப்படுகின்றன. நாட்டுப்புற மக்களின் வாழ்வியலில் முக்கிய கூறாக வழிபாடு விளங்குகிறது. நாட்டுப்புற மக்களின் வாழ்வில் எந்தவித நிகழ்ச்சிக்கும் முதலில் தாய்த் தெய்வ வழிபாடே முன்நிற்கின்றது. தமிழர் வாழ்வில் தெய்வ சிந்தனைகளில் பெண் தெய்வ வழிபாட்டை மையப்படுத்தி இந்தக் கட்டுரை ஆராய்கிறது. தாய்த் தெய்வம், தமிழ் இலக்கணங்களில் தாய்த் தெய்வ வழிபாடு, பழந்தமிழ் இலக்கியங்களில் தாய்தெய்வ வழிபாடு, நாட்டார் தெய்வங்கள் பற்றிய விளக்கம், நாட்டார் தெய்வ வழிபாட்டின் தன்மைகள், கதைகளும் வழக்கங்களும், பெண் தெய்வ தோற்றம், தேவாதியம்மன், சென்னியம்மாள் முதலிய பெண் தெய்வங்களை இக்கட்டுரை ஆராய்கிறது. பெண் தெய்வ வழிபாடு குறிப்பாக பழங்காலம் முதல் அரூர் வட்டார மக்களின் நம்பிக்கைகள் வரை ஆதாரமாகக் கொண்டு இக்கட்டுரை அமைகிறது.*

***முக்கியச் சொற்கள்:*** *நாட்டுப்புறவியல், தாய்தெய்வ வழிபாடு, நாட்டுப்புற தெய்வங்கள், தாய் தெய்வங்கள், தமிழ் இலக்கியம், தேவாதியம்மன் சென்னியம்மாள்*

## தாய்த்தெய்வம்

நாட்டார் தெய்வங்களைப் பெருந்தெய்வ வழிபாடு, சிறுதெய்வ வழிபாடு என்று வகைப்படுத்தலாம். இதனுள் ஆண் தெய்வங்களும் பெண் தெய்வங்களும் அடங்கும். நாட்டுப்புற மக்கள் குலச்சாமி, எல்லைச்சாமிகளையும் தம் வாழ்வியலோடு இணைத்து வழிபடுகின்றனர். முக்கியமாகத் தமிழர் தெய்வ வழிபாட்டில் முன்னோர் வழிபாடு குறிப்பிடத்தக்க ஒன்றாகும். தமிழர் வாழ்வில் தாய்த் தெய்வ வழிபாட்டை மையப்படுத்தியும். வட்டார மக்களின் நம்பிக்கைகளை ஆதாரமாகக் கொண்டும் கட்டுரை அமைகிறது. "சாதாரண மனிதரும் தாய்மை அனுபவத்தை உணர்ந்திருப்பதால் தாயை மனிதர் பாதுகாப்பான தெய்வமாக்கினர். மனித குலத்திற்குத் தாய் முதன்மையானதைப் போன்று மனித குல வழிபாட்டிலும் தாய்மை வழிபாடே முதன்மையானது எனலாம். "தாய்த் தெய்வங்கள்" என்று சுட்டப்படும் தகைமைப் பண்புடைவாயிருத்தல் கருதபடுகிறது"[1] என்று இரா.ருக்மணி கூறியுள்ளார். "உலகில் தாயாதிக்கச்சமுதாயம்" முதலில் தோன்றியது என்றும், தாய்த்தெய்வ வழிபாடு உலகமெங்கும் முதலில் ஏற்பட்டது என்றும் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்".[2] என்று இரா.சீனிவாசன் கூறுகிறர்.

அம்மன் வழிபாடு என்ற தாய்த் தெய்வ வழிபாடு தமிழர்க்குத் தலைமுறை தலைமுறையாக இருந்து வந்துள்ளது. தமிழரின் "தொல்வழிபாடுகளுள் ஒன்றாகக் கருதத்தக்கது.

மானுட வரலாற்றில் எத்தனையோ தெய்வங்களும், சமயங்களும் தோன்றி

மறைந்தன. ஆனால் மாற்றமின்றி இன்றுவரை மக்களால் வழிபடப்பெற்று நிலைத்து நிற்கும் வழிபாடு தாய்த்தெய்வ வழிபாடாகும்.

கிராமப்புற மக்களின் உணர்வோடு கலந்து, பெருந்தெய்வ வழிபாட்டினின்றும் மாறுபட்டு தலைமுறை தலைமுறையாக மக்களின் நம்பிக்கைக்குரியனவாக விளங்கும் நாட்டுபுறத் தெய்வங்கள் குறிக்கத்தக்கன.

### தமிழ் இலக்கணங்களில் தாய்த் தெய்வ வழிபாடு

போர்த் தெய்வமாக கொற்றவைத் தமிழ் மக்களால் வழிபடப்பட்ட நிலையினைத் தொல்காப்பியரின் கொற்றவை நிலை (தொல் .பொருள். பு.இ.நூ 62) நூற்பாவால் அறியலாம். வேந்தன் ஏவலால் ஆகோடற் குச் செல்லும் வெட்சி மறவர் தாய்த் தெய்வமாகிய கொற்றவையை வணங்கிச் செல்வர்.

புறப்பொருள் வெண்பாமாலை வஞ்சிப்படலத்தில் “கொற்றவை நிலை” என்ற துறையினைப் பற்றிக் கூறுகிறது

**“நீடோளான் வென்றி கொள்கென**
**நிறைமண்டை வலனுயரிக்**
**கூடாரைப் புறங்காணும் கொற்றவை**
**நிலை யுரைத்தன்று”[3]**

**(பு.வெ.மா.வஞ்சிப்படலம் : 5 கொற்றவை நிலை)**

### பழந்தமிழ் இலக்கியங்களில் சிறுதெய்வ வழிபாடு

சிலப்பதிகார வேட்டுவர் வரியில் கொற்றவை வழிபாடு விரிவாகப் பேசப்படுகிறது. கொற்றவைக்குச் செய்ய வேண்டிய கடனைச் செய்யாததால் மாற்றார் பேரூர் வளம் நிறைந்தன. வலிய வில்லையுடைய எயினர் மன்றங்கள் பாழ்பட்டன என்று இயங்கோவடிகள் கூறுகிறார்,

**“கல்லென பேரூர்க் கணநின்ற சிறந்தன**
**வல்விரலாயினர் மன்று பாழ் பட்டன”[4]**

கொற்றவை தமிழ்நாட்டில் எல்லா ஊர்களிலும் தாய்த் தெய்வமாக வணங்கப் பெற்றது. தொல் பழங்காலம் முதல் இன்று வரை கொற்றவை வழிபாடு செல்வாக்கு மிக்கப் பெண்தெய்வமாக நிலைப் பெற்றுள்ளதை அறியமுடிகிறது. தமிழர் வழிபாடு செய்யும் குலத்தெய்வம் என்பது பெரும்பாலும் ஆணாகவோ, பெண்ணாகவோ உள்ளது.

சிறு தெய்வங்களில் மாரியம்மன், அய்யனார் போன்றவைப் பெரும் பாரம்பரிய மரபை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன. இதனால் இத்தெய்வங்களை இடைநிலைப்பட்ட தெய்வங்கள் என்று கூறுவர்.

#### அகநானூறு

**“கடல்கெழு செல்வி கரைநின்றாங்கு**
**நீயே கானல் ஒழிய யானே**
**வெறிகொள் பாவையிற் பொலிந்தவென்**
**அணிதுறந்து**
**ஆடுமகன் போலப் பெய்தல்**
**ஆற்றேன் தெய்வ அயர்கவிவ் வுரே”[5]**

இந்த பாடலடிகள் நீர்த்துறைத் தெய்வத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறது.

### நாட்டார் தெய்வங்கள் பற்றிய விளக்கம்

பாமர மக்களின் வாழ்வியலில் நாட்டார் தெய்வங்கள் சிறந்த இடத்தைப் பெறுகின்றன. பண்டைய மரபு காரணமாகவும் சில நன்மைகளின் காரணமாகவும் நாட்டுப்புற மக்கள் வழிபடும் நாட்டுப்புறத் தெய்வங்களைப் பின்பற்றி வருகின்றனர்.

ராபர்ட் ரெட்ஃபீல்ட் என்பவர் பண்பாட்டு விளக்கத்தில் பெருமரபு, சிறுமரபு என்னும் இரு கருத்துப் படிமங்களைப் பெரிதும் பயன்படுத்தியுள்ளார்.“ஆகமவிதிகளின்படி நடக்கின்ற முறையான மரபைப் பெருமரபு

என்றும் ஞானிகள், சமயச்சான்றோர்கள், இலக்கிய ஆசிரியர் ஆகியோர்களின் மரபு பெருமரபு என்றும் கூறியுள்ளார். இம்மரபு உயர்ந்த மக்களின் கல்வியறிவினாலும் உயர்ந்த பண்பட்டாலும் உருவானதாகும். சிவன், திருமால், பிரம்மன் வடிவங்களைப் பெருந்தெய்வங்களாக மக்கள் வழிபடுகின்றனர். இத்தெய்வங்களுக்கு ஆகமவிதிகளின்படி கோயில் கட்டி வழிபாடு நடத்தப்படுகின்றன.

சிறுமரபைப் பாமர மக்களின் மரபு என்று கூறலாம். சிற்றூர்ச் சமுதாயத்தில் வாழ்கின்ற பாமர மக்களிடம் தோன்றி வளர்வது சிறு மரபாகும். இந்த சிறுமரபு மக்களின் வழக்கத்தின் மூலமே நடைமுறைப்படுத்தப்படுகிறது.

பழந்தமிழர் வாழ்வியல் முறைகளை அகவாழ்வு, புறவாழ்வு என இரண்டாகப் பகுத்துக் கொண்டு வாழ்ந்தனர். இவ்விரண்டு வகைகளில் இறைவழிப்பாட்டு நெறியினை வினையின் தொடக்கமாக அமைத்துக் கொண்டனார். நிலத்தின் அடிப்படையில் பழந்தமிழர் தெய்வத்தை வணங்கியதை,

**"மாயோன் மேய காடுறை யுலகமுஞ்**
**சேயோன் மேய மைவறை யுலகமும்**
**வேந்தன் மேய தீம்புன லுலகமும்**
**வருவணன் மேய பெருமண லுலகமும்**
**முல்லை குறிஞ்சி மருத நெய்தலெனச்**
**சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே"[6]**

என்ற தொல்காப்பிய நூற்பாவால் அறிய முடிகிறது.

## நாட்டார் தெய்வ வழிபாட்டின் தன்மைகள்

1. அச்சந்தரும் இயற்கைப் பொருள்களும் நிகழ்ச்சிகளும் தெய்வங்களாக உருவகிக்கப்பட்டன.
2. பருவத்தே மழை பெய்யவும், பயிர்வளம் செழிக்கவும், காவலாக உருவகிக்கப்பட்ட சக்திகள்.
3. நீர்நிலைகளைக் காவல் காக்கும் சக்தியாக வழிபடல்.
4. ஒவ்வொரு ஊருக்கும் காவல் சக்தியாக உருவகம் செய்து வழிபடல்..
5. கொள்ளை நோய்களிலிருந்து மனிதனைக் காக்கும் சக்தியாக வழிபடப்பட்டன.
6. குழந்தைகளைக் காக்கும் சக்தியாக வழிபடல்.
7. கால்நடைகளைக் காக்கும் சக்தியாக வழிபடல்.

குலத்தெய்வ வழிபாடு, ஊர்த்தெய்வ வழிபடாகவும், பிறகு பலரும் வணங்கும் சக்தியுள்ள தெய்வ வழிபாடாகவும் பரவிச் செல்வாக்குப் பெறும் நிலை ஏற்பட்டது. பல்வேறு இனக்குழு மக்கள் தங்கள் இனக்குழு குறிகளுக்குச் சிறுதெய்வ குறியீட்டைத் தந்துள்ளனர். என சாந்தி கிராமப்புறத் தெய்வங்களின் தன்மைகளாக எட்டு நிலைகளைக் கூறுகின்றார்[7].

## கதைகளும் வழக்கங்களும்

பெருங்கற்கால நினைவுச் சின்னங்கள் தரையின் மேற்பகுதியிலும், தரையின் கீழ்ப்பகுதிகயிலும் காணப்படுகின்ற காரணத்தால் இதை மக்கள் புதிராக எண்ணிப் பல கதைகளைக் கட்டி வைத்துள்ளனர். இக்கதைகள் ஒவ்வொரு பகுதியிலும் வகையாகக் கூறப்படுகின்றன. இக்கதைகளில் வரும் கருத்துகளும் தன்மையும் வேறுபட்டிருந்தாலும் இவைக் கூற வரும் மையக்கருத்து ஒன்று என்பது குறிப்பிடப்பட வேண்டியது அவசியம்.

சில இடங்களில் பெருங்கற்காலச் சின்னம் கடவுளால் உருவாக்கப்பட்டது இந்த கல்லறையின் கீழ்ப்பகுதியில் ஏழு கொப்பரை பணமும் தங்கமும் உள்ளன. இதற்குப் பலி கொடுத்தால் தானாக இப்பொருட்கள் வெளியில் வரும் என்று கதைகள் சொல்லப்படுகின்றன.

**பெண் தெய்வத் தோற்றம்**

நாட்டுப்புற மக்களால் வழிபடும் தெய்வங்கள் நாட்டுப்புறத் தெய்வங்களாகும். இத்தெய்வங்கள் மக்களால் நன்கு அறியப்பட்டவையே. இத்தெய்வங்களின் தோற்றங்களுக்குப் பல வாய்மொழிக் கதைகள், செவி வழிகதைகள் வழங்கப்பட்டு வருவதுண்டு. இத்தெய்வங்கள் மக்களாக வாழ்ந்து தானாகவே ஊர் நன்மைக்காகவோ அல்லது குறிப்பிட்ட சிலரால் வன்கொலை செய்யப்பட்டோ உயிரிழந்தவர்கள், அதிலும் குறிப்பாக பெரும்பாலான பெண் தெய்வங்கள் கொல்லப்பட்டு இறந்தவர்கள் என்பது கவனிக்கத்தக்கது, ஊரில் ஏற்படும் நோய்க்கும், மழை பெய்யாமைக்கும் இத்தெய்வங்களே காரணம் என்று நம்பினர். எனவே அவற்றுக்கு வழிபாடுகள் செய்து மக்கள் தெய்வங்களாக வணங்கினர். அவ்வாறு வணங்கப்பெறும் தெய்வங்களுன் பெரும்பான்மை பெண் தெய்வங்களே குறிப்பிடத்தக்கது.

இப்பெண் தெய்வங்கள் ஊர்த்தெய்வங்கள், பொதுத்தெய்வங்கள், இனத்தெய்வங்கள், குலத் தெய்வங்கள், பத்தினித் தெய்வங்கள், காவல் தெய்வங்கள், எல்லைத் தெய்வங்கள் எனப் பலநிலைகளில் வணங்கப்படுகிறது. அரூர் வட்டாரத்தில் உள்ள பெண் தெய்வங்கள் உருவாகிய சூழல் குறித்து ஏற்பட்டுள்ள கதைகள் இங்குப் பாடுப்பொருளாக அமைகிறது.

**சென்னியம்மாள் (நீப்பத்துறை)**

சவ்வாதுமலையில் கீழ் சிறிய கிராமத்தில் தொழுவேளாளர் குலத்தில் ஆதித்தன் அவன் மனைவி கோதாவரி என்போருக்கு குழந்தையாக பிறந்தவள் சென்னியம்மாள். சில காலம் சென்ற பின் அவள் கன்னிப்பருவம் அடைந்தாள். அது சமயம் ஆற்காடு நவாப் வரிவசூல் செய்ய சென்னியம்மாள் தந்தையிடம் வந்தான். சென்னியம்மாள் அங்கு இருந்தாள் அப்போது நவாப் அவளைப் பார்த்து மோகங்கொண்டு தனக்குத் திருமணம் செய்து கொடுக்கும்படி அவள் தந்தையை வேண்டினான். அவளின் தந்தை நவாப் இடம் எட்டாவது நாள் வரச்சொன்னார். இத்திருமணம் சென்னியம்மாளுக்குப் பிடிக்கவில்லை அதனால் அவள் தந்தையிடம் எனக்கு வேதக்காரன்பொட்டி (மூங்கில் பிரம்பாலான கூடை) ஒன்று தனது உயரத்திற்குச் செய்து கொடுக்கும்படி வேண்டினாள். அவ்வாறே செய்தனர் அதன் பிறகு அவளைக்கூடையில் வைத்துத் தென்பெண்ணையாற்றில் விட்டனர்.

ஆற்காட்டு நவாப்பு தன் படைகளுடன் கல்யாண கோலத்தில் ஊருக்கு வந்து விசாரித்தான். ஊரிலுள்ளவர்கள் பயந்து சென்னியம்மாள் ஆற்றங்கரைக்குச் சென்றாள். என்று கூறினர். அதன் பிறகு நவாப் தனது பரிவாரங்களுடன் தேடி வந்தான் சென்னியம்மாள் தன் அண்ணனாகிய வெங்கட்ராமனை நினைத்து நீ சொல்லியபடியே நான் செய்தேன். நவாப் வந்துவிட்டான் என்னைக் காத்தருள வேண்டும் என்று வேண்டினாள். அப்பொழுது ஆற்றில் இருகரை வெள்ளம் புரண்டோட பெட்டி வெள்ளத்தில் மிதந்து சென்றது. தன் அண்ணன் வெங்கட்ராமன் பெட்டிக்கு மேல் கருடன் மீது அமர்ந்துவர “செட்டிக்கு” மடுவுக்குக் கீழ்ப்புறம் ஒரு பெரும்பாறையில் அமரும் என்று வெங்கட்ராமன் கூறினார். அதன்படி பாறையில் அமர்ந்தாள். அங்கு கலியுக தெய்வமானாள். வெங்கட்ராமன் நவாப்பிடம் சென்று “நீ என் தங்கையைத் தெய்வமென்று அறியாமல் அவளைத் தொடர்ந்து வந்தபடியால் இன்று இக்கரையில் இவ்வம்மனுக்கு நீ சேவகனாய்க் காவல் புரிந்துக் கொண்டு இருக்கவேண்டும் என்று கூறினார்.

அதன் பிறகு ஆற்றில் ஏழு கன்னிமார்கள் அவளை பாதுக்காத்தனர் நடு ஆற்றில் ஒரு பாறை மேல் சென்றபோது சென்னியம்மாள்

மறைந்துவிட்டாள். அதன் பிறகு அந்த ஊரை சென்னியம்மாள் காப்பாற்றுவதாக மக்கள் நம்புகின்றனர். நவாப்பைப் பெருமாள் தெய்வம் அழித்தது. இந்த கதை பற்றிய செய்தி “நன்னன் நாடு” என்ற மாத இதழில் 1983இல் வெளிவந்துள்ளது.

### சென்னியம்மாள் கோயில்

நீப்பத்துறை என்னும் ஊரில் கோயில் அமைந்துள்ளது. இயற்கை சூழலில் தென்பெண்ணை ஆற்றின் பாறையில் அமைந்து காட்சி அளிக்கிறது. ஆற்றின் ஓரத்தில் பெரிய கோயில் அமைந்துள்ளது.

### சென்னியம்மாள் உருவம்

ஆற்றின் நடுவில் பாறையில் தலை உருவம் மட்டும் வைத்து வணங்குவது உண்டு. பாறையின் நடுவில் அரசமரம் மற்றும் வேப்பமரம் அமைந்துள்ளது. ஆற்றங்கரை ஓரமாக ஒரு கோயில் அமைந்து இருக்கிறது. கருவறையில் உள்ள சிலை மதுரை மீனாட்சிஅம்மன் போல காட்சி தருகிறது. இங்கு ஏழு கன்னிமார்களுக்கு சிலை வைத்து வணங்குகின்றனர்.

### வழிபாடு

பூசாரியாக வருடத்திற்கு ஒருவர் எனத் தேர்ந்தெடுத்து பூசை நடைபெறுகிறது. சந்தனம், பன்னீர், எண்ணெய், திருநீர், பஞ்சாமிர்தம் போன்றவை மூலம் அபிசேகம் நடைபெறுகிறது. வெள்ளி, செவ்வாய்க் கிழமையில் பூசை நடைபெறுகிறது. மற்ற சிறப்பான நாட்களிலும் பூசை நடைபெறுகிறது. ஆடு, சேவல் பலிக் கொடுக்கும் வழக்கமும் உண்டு. மேலும் பொரி, கருமணி, குங்குமம், அவுளு போன்றவைப் படையலாகத் தருவது உண்டு. பூசை போட்ட பிறகு பலி கொடுப்பது உண்டு.

### திருவிழா

ஆடிமாதத்தில் பெருவிழாவாக நடைபெறுகிறது. ஆற்றில் உள்ள பாறைக் கோயிலில் சிறப்பான பூசை நடைபெறுகிறது ஆற்றில் மக்கள் கூட்டம் அதிக அளவில் காணப்படுவார்கள். ஆளுடையன் கோயில் பலி இடுவது உண்டு. பொங்கல் வைத்துப் பூசைப் பொருட்களை வைத்தும் படையல் போட்டு பலிக்கொடுத்துத் திருவிழா கொண்டாடப்படுகிறது. சென்னியம்மாள் பக்தர்களுக்குக் காட்சி அளிப்பது உண்டு. ஆடி 18 அன்று சிறப்பாக விழா கொண்டாடப்படுகிறது. விழாவுக்கு வெளியூர், வெளிமாநிலம், வெளிநாடு போன்ற இடங்களில் இருந்து பக்தர்கள் வருகின்றனர்.

### நம்பிக்கைகள்

சென்னியம்மாளிடம் வேண்டியக் கொண்டால் நல்லது நடக்கிறது என்று மக்கள் நம்பிக்கை வைத்துள்ளனர். திருமணம் ஆகாத பெண்கள் அரச மரத்தில் மஞ்சள் கயிறு கட்டினால் விரைவில் திருமணம் நடக்கும் என நம்பப்படுகிறது. குழந்தையில்லாதவர்கள் அங்கு அசரமரத்தில் தொட்டில் கட்டினாலும் அம்மனிடம் இடம் சென்று முட்டிப்போட்டு வேண்டிக்கொண்டு கீழே வைத்திருக்கும் வாழைப் பழத்தை வாயில் எடுத்து சாப்பிட்டாலும் விரைவில் குழந்தை பிறக்கும் என மக்கள் நம்பிக்கை வைத்து இருக்கிறார்கள்.

100 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு குடும்பத்தைச் சேந்த ஒருவர் ஒரு மண்டலம் விரதம் இருந்தார் அவர் ஆற்றில் இரவு 12 மணிக்கு பூசை செய்யும் போது அவர் கண்களுக்கு மட்டும் ஆற்றில் அம்மனின் சேலையின் முந்தானை மின்னல் போன்று தெரியும் அதுவும் ஒரு நொடியில் தோன்றிமறையும். அதன் பிறகு ஊருக்குள்ளே சென்று மக்களுக்கு பொரியை வழங்குவது உண்டு. ஆனால் இப்போது இவை நடைபெறுவதில்லை.

மக்கள் அதிக அளவில் இத்தெய்வத்தின் மீது நம்பிக்கை வைத்து இருக்கிறார்கள். இந்த கோயிலில் காதுகுத்துதல், திருமணம் போன்றவை நடைபெறுவதும் உண்டு.

### தேவாதியம்மன் (அரூர்)

அரூரில் காமாட்சியம்மன் கோயில் பின்புறம் தேவாதியம்மன் கோயில் உள்ளது. இந்த அம்மன் துவரைச்செடியின் அடியில் மூன்று செங்கல் வைத்து பூசைகள் செய்து வழிபாடுகிறார்கள். திருவிழாவும் நடைபெற்று வருகிறது.

### திருவிழா

திருவிழாவின்போது மக்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து கொண்டாடுகிறார்கள். பெண்கள் காலை வேளையில் பொங்கல், பால் குடம், மாவிளக்கு எடுப்பார்கள். ஆனால் ஆண்கள் மட்டும் தான் இந்த விழாவில் கலந்துக்கொள்ளுவர்கள்.

தை மாதத்தில் 24 மனை தெலுங்கு செட்டியார்கள் சமூகத்தின் சார்பாக திருவிழா கொண்டாடப்படுவது வழக்கம். வியாபார மேம்பாடு, குடும்ப நலம், ஊர் நலம், அமைதி, மழை வளம் ஆகியவற்றை வேண்டி நடத்தப்படும். அதன்படி அம்மனுக்கு இரவில் சாமிக்கு சிறப்பு அபிஷேகம் வழிபாடு நடந்துவதும் உண்டு. தொடர்ந்து பதினாறு ஆடுகள் அம்மனுக்கு பலியிடப்படுகிறது. அந்த ஆடுகளின் இரத்தத்தை பக்தர்கள் அனைவரும் நெற்றியில் பூசிக் கொண்டு அம்மனை வழிபடுகின்றனர். அதன்பிறகு அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்படுகிறது.

காலையில் கோயிலுக்கு 204 ஆடுகள் வெட்டப்பட்டு 2000 குடும்பங்களுக்கு இறைச்சி பங்கிட்டு வழங்கப்படும். இந்த இறைச்சியைஅவர்கள்சமைத்துகுடும்பத்தினருடன் சாப்பிடுவார்கள் 24 மனை தெலுங்கு செட்டியர் இனத்தவர்கள் மட்டும் வணங்கி வருகிறார்கள்.

### முடிவுரை

இயற்கையின் ஆற்றலைக் கண்டு அஞ்சிய மனிதன் அதன் சீற்றத்திற்கு ஆளாகாமல் இருக்கலாம் என்று நம்பினான். அதன் அடிப்படையில் இயற்கை வழிபாடுகளும் விழாக்களும் தோற்றம் பெற்றன. காலப்போக்கில் தெய்வங்களுக்கு உருவம் கொடுத்து பொங்கல் வைத்து, பலி கொடுத்து வணங்கினார்கள். புராணக் கதைகள், கனவில் வரும் கதைகள், புற்றாக இருந்து உருவான கதைகள், சுயம்பாக வந்த கதைகள், அருள் வாக்கும் சொன்ன கதைகள், வரலாற்றுக் கதைகள், இறந்தவர் நினைவாக வரும் கதைகள், போன்றவை எடுத்துக்கூறுவதைக் கதை சூழலாக வைக்கப்பட்டுள்ளது. சிறு தெய்வங்களில் பெண் தெய்வங்கள் மக்களின் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்து கிடப்பதை இதன் மூலம் அறியமுடிகிறது.

### அடிக்குறிப்புகள்

1. இரா. ருக்மணி, சிதம்பரனார் மாவட்டச் சிறுதெய்வங்கள் ப - 22
2. இரா. சீனிவாசன், சக்திவழிபாடு ப - 19
3. கழக வெளியீடு, புறப்பொருள் வெண்பாமாலை வஞ்சி - 5
4. கழக வெளியீடு, சிலப்பதிகாரகம் வேட்டுவ வரி
5. இரா. செயபால், அகநானூறு பாடல் - 370
6. நச்சினர்க்கியர் உரை தொல்காப்பியம், பொருள் நூற்பா : 5 ப - 11
7. அ.இராசேந்திரன், நாட்டுப்புறப் பண்பாட்டு வழக்கங்கள் ப - 12
8. நன்னன் நாடு, 1983